# கழக வரலாற்றில் திருச்சி எப்போதும் திருப்பம் தரும் எனப் பறைசாற்றி

# மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சிதான் என்ற திருப்பத்திற்கான அச்சாரமாகத் திரண்ட மக்கள்!





கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.4.2026) திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், திருச்சி மேற்கு தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் கே.என். நேரு, திருச்சி கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் இனிகோ இருதயராஜ், திருவெறும்பூர் தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, லால்குடி தொகுதி கழக வேட்பாளர் பாரிவள்ளல் தங்கவேல், மண்ணச்சநல்லூர் தொகுதி கழக வேட்பாளர் கதிரவன், திருவரங்கம் தொகுதி கழக வேட்பாளர் துரைராஜ், மனிதநேய மக்கள் கட்சியின் மணப்பாறை தொகுதி வேட்பாளர் அப்துல் சமது, முசிறி தொகுதி கழக வேட்பாளர் கருணை ராஜா, காங்கிரஸ் கட்சியின் துறையூர் தொகுதி வேட்பாளரையும் ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, துரை வைகோ, அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சி மத்திய மாவட்ட கழகச் செயலாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், கூட்டணி கட்சித் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. கூட்டணிக்காக – மதச்சார்பற்ற கூட்டணிக்காக மட்டுமல்ல;

# நாம் போராடுவது தமிழ்நாட்டின் வெற்றிக்காக - திருச்சியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி...

இந்த அளவிற்கு ஏன் உரிமையுடன் நான் பேசுகிறேன் என்று கேட்டால், அந்த அளவிற்கு இந்தத் திருச்சிக்காகப் பல முத்திரைத் திட்டங்களை கடந்த 5 ஆண்டுகளில் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். அவற்றை எல்லாம் சொல்ல முடியாது. காரணம், நேரமில்லை. கொடுமையான வெயிலில் நீங்கள் எல்லாம் இங்கே காத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, சுருக்கமாக - தலைப்புச் செய்தியாக மிக மிக சிறப்புக்குரிய சிலவற்றை மட்டும் நான் உங்களிடம் லிஸ்ட் போடக் காத்திருக்கிறேன்.

பக்கத்து மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கூட, “இது என்னப்பா! ஒரு பஸ் ஸ்டாண்டே ஏர்போர்ட்டை மிஞ்சும் அளவிற்கு இருக்கிறது என்று வியந்து போய் வீடியோ போடும் திருச்சி பஞ்சப்பூர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், அதன் அருகிலேயே பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம்.

அடுமட்டுமல்ல, திருவரங்கம், லால்குடி நகராட்சிகளிலும் புதிய பேருந்து நிலையங்கள். திருச்சி மாவட்டத்தில் 327 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம்.

பள்ளிக்கல்வித் துறையை இன்றைக்கு கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் அப்படிப்பட்ட அமைச்சரைத் தந்த உங்கள் மாவட்டத்தில் இரண்டு மாதிரிப் பள்ளிகளைக் கட்டியிருக்கிறோம்.

### திருச்சி மாவட்டத்திற்கு 9 கூட்டுக்குடிநீர் திட்டங்கள்!

உங்கள் மாவட்டத்திற்கு மட்டுமே நம்முடைய நேரு அவர்கள் 9 கூட்டுக் குடிநீர் திட்டங்களையும், 18 மறுசீரமைப்புக் குடிநீர் திட்டங்களையும் தொடங்கி செய்து கொடுத்திருக்கிறார்.

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி சூரியூரில் மினி ஸ்டேடியம் மற்றும் ஜல்லிக்கட்டு மைதானம்.

துறையூரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

சமயபுரத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, தங்கத்தேர் உலா.

மணப்பாறையில சிப்காட் தொழிற்பூங்கா.

இதுமட்டுமல்ல, கூடிய விரைவில் நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சியின் தொடக்கத்திலேயே திறந்து வைக்க இருக்கும் பெரிய திட்டங்கள் என்னவென்று இப்போது சொல்கிறேன்.

டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் பெருந்தலைவர் காமராசர் பெயரில் அமைய இருக்கும் பிரம்மாண்டமான நூலகம்.

பஞ்சப்பூரில் டைடல் பூங்கா.

சூரியூரில் மிகப் பெரிய ஒலிம்பிக் அகாடெமி

## ‘திராவிட மாடல்’ ஆட்சி மீண்டும் மீண்டும் வர வேண்டும்!

ஆகியவற்றை நாம் உங்கள் அன்போடு - ஆதரவோடு வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, விரைவில் அதைத் திறந்து வைக்க இருக்கிறோம்!

நான் சொல்லி இருப்பது அனைத்தும், ‘மெகா - மகா’ திட்டங்கள். திருச்சி என்றாலே பிரம்மாண்டம்தான். அதனால்தான், உங்கள் மாவட்டத்தில் இருக்கும் அனைத்துத் தொகுதி மக்களுக்காகவும்இப்படிபிரம்மாண்டமானதிட்டப்பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். இவை தவிர இன்னும் ஆயிரக்கணக்கான திட்டப் பணிகளை தொகுதிவாரியாக செய்து கொடுத்திருக்கிறோம்.

தலைநகர் சென்னைக்கே சவால் விடும் வகையில் திருச்சி இன்றைக்குத் தரம் உயர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இதை என்னால் நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியும். மொத்தமாக டோட்டல் போட்டால், நான் பெருமையோடு சொல்கிறேன்... கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் திருச்சிக்காக 26 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் உரிமையுடன் உங்களிடத்தில் உரிமையோடு வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.

2021-ஆம் ஆண்டு எங்கள் மேல் நீங்கள் எல்லாம் நம்பிக்கை வைத்து, ஆதரவளித்து பொறுப்பில் உட்கார வைத்தீர்கள். உங்களின் நம்பிக்கையை நான் இன்றைக்குக் காப்பாற்றி இருக்கிறேன். கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். கொடுக்காத பல வாக்குறுதிகளையும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயண வசதி செய்து தருவோம் என்று சொன்னேன். முதலமைச்சரான முதல் நாளே பதவியேற்றுக் கொண்டு, கோட்டைக்குச் சென்று, முதல் கையெழுத்தைப் போட்டேன். மகளிர் அனைவரும் இன்றைக்கு டவுன் பஸ்ஸில் கட்டணமில்லாமல் பயணிக்கிறீர்களா, இல்லையா?

மகளிருக்கு மாதம்தோறும் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்குவோம் என்று சொன்னோம். ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மாதம்தோறும் உரிமைத் தொகை வழங்குகிறோம். உண்டா, இல்லையா? இப்போது நம்மைப் பார்த்துதான் மற்ற மாநிலங்களிலும் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

காலை உணவுத் திட்டம், வாக்குறுதியில் சொல்லாத திட்டம்.

19 இலட்சம் பிள்ளைகள் சூடான சுவையான காலை உணவைச் சாப்பிட்டு படிக்கிறார்கள்.

நான் முதல்வன் திட்டமும் தேர்தல் அறிக்கையில் சொல்லப்படவில்லை. 48 இலட்சம் திறன் பயிற்சி சான்றிதழ்களை நம்முடைய இளைஞர்கள் நான் முதல்வன் திட்டத்தில் இன்றைக்குப் பெற்றிருக்கிறார்கள்.

அரசு பள்ளி மாணவர்கள் உயர்கல்வியில் சேருவதை உறுதிசெய்ய உருவாக்கப்பட்ட திட்டங்கள்தான் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள். 9 இலட்சம் மாணவ-மாணவியர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் பொங்கல் திருவிழாவை நீங்கள் எல்லாம் சிறப்பாகக் கொண்டாட 3,000 ரூபாய் வழங்கினோம். 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு அனைவருக்கும் வந்ததா?

மகளிர் உரிமைத் தொகையைத் தேர்தலை காரணம் காட்டித் தடுக்க நினைத்தார்கள். அதையும் முன்கூட்டியே தெரிந்து கொண்டு, மூன்று மாதங்களுக்கான தொகையையும், கோடை காலச் சிறப்பு நிதி 2 ஆயிரம் ரூபாயும் சேர்த்து, 5 ஆயிரம் ரூபாயை அட்வான்சாகக் கொடுத்தோம். 5 ஆயிரம் ரூபாய் உங்களுக்கு வந்ததா, இல்லையா?

அரசு ஊழியர்களின் நீண்ட ஆண்டுகாலப் பிரச்சினை, சற்றேறக்குறைய 22 ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றி, சொன்னபடியே உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தி, இன்றைக்குச் சாதனை படைத்திருக்கிறோம்.

இவை அனைத்திற்கும் மேல், தமிழ்நாட்டில் சாதிக் கலவரம் இல்லை, பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் போன்று மதக் கலவரங்கள் இல்லை. உத்தர பிரதேசம் போன்று கும்பல் வன்முறை இல்லை. மணிப்பூர் போன்று தொடர் வன்முறைகள் இல்லை.

இப்படி அனைத்தையும் உருவாக்க வேண்டும் என்று பா.ஜ.க. செய்த சூழ்ச்சிகளையும் நாம் முறியடித்திருக்கிறோம். அமைதியான சூழலும், திறமையான மனித வளமும், நம்முடைய ஆட்சியில் இருக்கும் காரணத்தினால்தான் இன்றைக்கு முதலீடுகளும் தமிழ்நாட்டில் வந்து கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்! அதற்கான தெளிவான செயல்திட்ட அறிக்கையாக தி.மு.க. தேர்தல் அறிக்கையை நான் வெளியிட்டிருக்கிறேன்.

அதில் நான் சொல்லியிருக்கும் அறிவிப்புகள் பல இருக்கிறது. நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள். ஹைலைட்டாக பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கும் சில வாக்குறுதிகளை மட்டும் நான் சொல்கிறேன்.

மாதம்தோறும் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத்தொகை என்பதை இரண்டு மடங்காக இனி 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க போகிறோம்! என்ன மகிழ்ச்சிதானே?

அதேபோன்று, புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு இப்போது மாதாமாதம் 1,000 ரூபாய் வழங்கி வருகிறோம். இனி அது ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

அதேபோன்று, காலை உணவுத் திட்டத்தை 8-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்த நாம் அறிவித்திருக்கிறோம்! மேலும், 15 இலட்சம் மாணவர்கள் அதனால் பயன்பெறப் போகிறார்கள். இன்னும் அதிகமான தாய்மார்கள் காலையில் சீக்கிரம் எழுந்து சமையல் செய்யும் சுமை குறையப் போகிறது.

### பேசு பொருளாக மாறிய இல்லத்தரசி திட்டம்!

அதேபோன்று, இல்லத்தரசிகளுக்கு மகிழ்ச்சி தரும் இன்னொரு சூப்பர் டூப்பர் வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறோம். இல்லத்தரசிகள்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்